பு.செ.எண்: 55 நாள்: 24.03.2020

## பத்திரிக்கைச் செய்தி

கொரோனா வைரஸ் தொற்று நோயைத் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் 24.03.2020 மாலை 6.00 மணி முதல் 01.04.2020 காலை 6.00 மணி வரையில் குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 144 (1)–ன் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், பொது இடங்களில் கூட்டம் கூடுவதை தவிர்க்க வேண்டும். அவசரத் தேவைகளுக்கு மட்டும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டும். ஐந்து நபர்கள் மற்றும் அதற்கும் மேலாக பொது இடங்களில் கூடவோ, கூட்டமாக செல்லவோ கூடாது. மீறுபவர்கள் மீது சட்ட விதிகளுக்குட்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் .

அரசால் விலக்களிக்கப்பட்ட மளிகைக் கடைகள், காய்கறிக் கடைகள், பால், பழங்கள் அனைத்து வகையான இறைச்சிக் கடைகள் மற்றும் மருந்தகங்கள் ஆகிய அத்தியாவசிய இனங்கள் தொடர்ந்து செயல்படும். மாவட்டத்தில் உள்ள மற்ற அனைத்து வணிக நிறுவனங்கள், மதுபானக் கடைகள், தன்னாட்சி நிறுவனங்கள் இக்காலக் கட்டத்தில் மூடப்பட வேண்டும்.

தனியார் பேருந்துகள், அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், வாடகை மகிழுந்துகள், ஆட்டோக்கள், ஷேர் ஆட்டோக்கள் உள்ளிட்ட பொதுப் போக்குவரத்து சேவைகள் தடை செய்யப்படுகின்றன. எனினும், அத்தியாவசியப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட வாகனங்கள், ஆம்புலன்ஸ் சேவை, மருத்துவமனைகள் சார்ந்த வாகனங்கள், இறுதிச் சடங்கிற்கான வாகனங்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களுக்கிடையேயானா போக்குவரத்து சேவைகள் தடை செய்யப்படுகிறது.

அனுமதிக்கப்பட்டுள்ள அரசு பொதுத் தேர்வுகள் நடத்துவதற்கான அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர அனைத்து ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் 31.03.2020 வரை வீட்டில் இருந்து பணியாற்றுவர். அனைத்து செவிலியர் கல்லூரிகள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்த கல்வி நிறுவனங்கள், வங்கிகள், அஞ்சலகங்கள் தொடர்ந்து செயல்படும்.

உணவகங்கள், சிற்றுண்டிச் சாலைகளில் அமர்ந்து உணவருந்த தடை செய்யப்பட்டுள்ள நேரத்தில், அவர்கள் பார்சல் வழங்கிட தடையேதும் இல்லை.

பொதுமக்களுக்கான அத்தியாவசியத் தேவைகள் கிடைத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர்,
நீலகிரி மாவட்டம்.